மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education, Northern Province** 51 T I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2024
**General Certificate of Education (Adv. Level) Examination, 2024**

| சித்திரக் கலை I<br>**Art I** | 1ம் தவணை<br>தரம் 12 | புள்ளித்திட்டம்<br>**Marking Scheme** |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 6) 5 | 11) 2 | 16) 4 |
| 2) 4 | 7) 2 | 12) 3 | 17) 3 |
| 3) 2 | 8) 3 | 13) 5 | 18) 4 |
| 4) 3 | 9) 2 | 14) 5 | 19) 1 |
| 5) 1 | 10) 5 | 15) 2 | 20) 4 |

## பகுதி II

**01. இலங்கைக் கலைச் சங்கமானது சமகால ஓவியக்கலையுடன் தொடர்புடைய பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தது.**

**1) இலங்கைக் கலைச் சங்க கலைஞர்கள் இருவரது பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)**

A.C.G.S அமரசேகரா , J.D.A பெரேரா , டேவிட் பெய்ன்ரர்

**2) ஓவியக்கலைஞராக மட்டுமன்றி மாந்திரீக விடயங்களையும் கையாண்ட கலைஞராக A.C.G.S அமரசேகர விளங்கியமையை அவரது 'பேய் ஓட்டியின் மகள்' என்ற ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)**

- பாரம்பரிய மக்கள் வாழ்வியலுடனிணைந்த சாந்திக் கிரியைகளுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்தல்.
- அக்கடமிக் யதார்த்தவாதப் பண்புகள் பின்பற்றப்பட்டிருத்தல்.
- தூரதரிசனம் வெளிப்படும் வகையில் முன்னணி, இடையணி, பின்னணியில் கருத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்.
- சாந்திக் கிரியைகளுக்கான உடையணிந்த யுவதி (பேயோட்டியின் மகள்) பிரதான பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டிருத்தல்.
- பிரதான கருப்பொருளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் 'காரா' வேடமுகம், கோலம் வேடமுகம், பாரிய நிழல் அந்தரத்தில் எரியும் நெருப்பு, பூட்டிய கதவு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இருண்ட பின்னணியில் தீச்சுடர் ஒளியின் மூலம் பேயோட்டியின் மகளது முகத்தில் அச்சம், திகைப்பு, அதிர்ச்சி போன்ற உணர்வு வெளிப்பாடுகள் சிறப்பாகக் காட்டப்பட்டிருத்தல். ஓவியம் முழுவதும் பரவியுள்ள தனிவர்ணப் பின்னணியில் நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய மூலவர்ணங்கள் தெளிவாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

kalvi.lk

**iii) பிரதிமை ஓவியக் கலையில் சிறந்து விளங்கிய J.D.A பெரேராவின் ஓவியப்படைப்புக்கள் தொடர்பில் மதிப்பீடு செய்க.** **(08 புள்ளிகள்)**

- இலங்கைக் கலைச்சங்கத்தினை தாபிப்பதில் முன்னோடியாக செயற்பட்டவர்.
- படைப்புகளில் அக்கடமிக் யதார்த்தவாதப் பண்புகள் வெளிப்படுகின்றன.
- பிரசித்திபெற்றவர்களதும், கல்விமான்களதும் பிரதிமைகளை வரைந்தார்.
  உ – ம் ஏதல் வோக்கர், சீதா டி சேரம், மாமியின் உருவப்படம்
- கருப்பொருள் சார்ந்த ஓவியங்களில் சீட்டாடுபவன், இந்து யாசகன், தபசு, ஊர்வலம். போன்றன குறிப்பிடத்தக்கன.

**பொதுவான பண்புகளாவன,**

- கன்வஸ் தளத்தில் எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டவை.
- மனித உருவங்கள் விடயப்பொருளாகக் காணப்படல்.
- ஐரோப்பிய யதார்த்தவாதப் பண்புகள் காணப்படல்.
- வெளிப்புற அர்த்தம் பின்தள்ளப்பட்டு இரண்டாவது அர்த்தமொன்று கட்டியெழுப்பப்படல்.
- உருவத்துக்குப் பொருத்தமான பின்னணியும் அங்கு ஆட்களின் பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் குறியீடுகள் பயன்படுத்தப்படல்.

**சந்திரலேகா(நடனமாது)**

- முன்னணி பின்னணி ஆகிய இரு தளங்களில் உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
- அக்கடமிக் கலைப்பண்புகளுக்கமைய மனிதப் பின்னணியில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- நடனமாது என்பதை உறுதிப்படுத்த பின்னணித் திரையில் தடித்த அலை மடிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- வர்ணங்கள், நுணுக்கமான கோடுகளாலும், முகத்தில் காட்டப்பட்டுள்ள வெளிப்பாடுகளாலும், உடல் மெய்நிலைகளாலும், உள்ளுணர்வுகள் வெளிக்காட்டப்பட்டடுள்ளன.
- பிரகாசமான வர்ணங்கள், இணக்கமான வர்ண பேதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சீதா டி சேரம்**

- சீதா டி சேரம் என்ற பெண்ணின் பிரதிமையாகும்.
- புலமை வெளிப்படுத்துவதற்காக திறந்த நிலையில் புத்தகம் காட்டப்பட்டுள்ளது.
- கூர்மையான முன்னோக்கிய பார்வை வெளிப்படையான அர்த்தத்தினைப் பின்தள்ளி உணர்வு வெளிப்பாட்டினை முதன்மைப்படுத்துகிறது.
- வேகமான தூரிகை வீச்சுடன் இள நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- மனப்பதிவுவாத வர்ணந்தீட்டல் முறைக்கு ஒப்பானதாக காணப்படினும் அக்கடமிக் பண்புக்கமைய ஒளிநிழல் காட்டப்பட்டுள்ளது.

**02. பௌத்த கட்டடக்கலை வரலாற்றில் அனுராதபுரக் காலம் என்பது ஆரம்ப ஸ்தானமாக விளங்கியது எனலாம்.**

1) **அனுராதபுரகாலத் தூபிகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)
   தூபாராம, ருவான்வெலிசாய, அபயகிரி, ஜேதவனராம

2) **இலங்கையின் முதன் முதலில் கட்டப்பட்ட தூபராம தூபின் கலைப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.** (05 புள்ளிகள்)

- இலங்கையில் முதன்முதல் அமைக்கப்பட்ட தாதுகோபம் என கருதப்படுகிறது.
- தேவநம்பிய தீஸனால் புத்தபிரானின் வலது காறை என்பினை வைத்து கட்டுவிக்கப்பட்டது.
- எட்டுப் புனித ஸ்தலங்களில் ஒன்று(அட்டமஸ்தானம்)
- தூபியுடன் சேர்ந்து விகாரை (ஆராமை)யும் கட்டப்பட்டமையால் தூபாராம எனப்பட்டது.
- ஆரம்பத்தில் இத்தூபி சுட்ட கல்லினால் செய்யப்படாமல் சாஞ்சி தாதுகோபத்தின் மாதிரிக்கமைய ஆக்கப்பட்டது.
- இதற்காக அபய குளத்திலிருந்து பெறப்பட்ட உலர் சேறு பயன்படுத்தப்பட்டது.
- காலத்துக்குக் காலம் வெவ்வேறு மன்னர்களால் திருத்தவேலை செய்யப்பட்டது.
- ஆரம்ப வடிவம் நெற்குவியல். தற்போது மணி வடிவம்.
- அடி விட்டம் 59 அடி, உயரம் 63 அடி.
- 11.4 அடி உயரமுடைய வட்ட வடிவ மேடையின் மீது அமைக்கப்பட்டது.
- இதனைப் பாதுகாப்பதற்கு வட்டதாகே அமைக்கப்பட்டது.

3) **பௌத்த தூபிகளுடன் தொடர்புடைய 'கர' எனப்படும் கட்டடப் பகுதிகளின் கலைப் பண்புகள் தொடர்பில் ஆராய்க.** (08 புள்ளிகள்)

தாதுகோப கட்டடக்கலையுடன் இணைந்ததாக அமைக்கப்பட்ட மனை அமைப்புடைய கட்டடங்கள் "கர" வகைக்குள் அடங்குகின்றன.

**தூபகர / சைத்தியகர (வட்டதாகே)**

- சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டது.
- தூபியை சுற்றி கல்வேலியமைத்து அதன் மேல் கூரை அமைக்கப்பட்டது.

  உ-ம் : தூபாராம, ஹிந்தகல சிலாசேத்திய, லங்காராமய, மெதிரிகிரிய, ஹத்திக்குச்சி விகாரை, பொலநறுவ வட்டதாகே, திரியாய

**போதிகர(அரசமர மண்டபம்)**

- போதி மரத்தினைப் பாதுகாப்பதற்காக அதனைச்சுற்றி வட்டம் அல்லது சதுரமான வடிவில் அமைக்கப்பட்டது. இது இரண்டு அல்லது மூன்று அடுக்குகளில் அமைக்கப்பட்டது.

  உ-ம் : நில்லக்கம, பண்டுவஸ்நுவர, மகுள் மகா விகாரை, படிகெம்கல, லங்காராம,

**ஆசனகர**

- புத்தபெருமானின் பொருட்டு குறியீட்டுத் தன்மையில் ஆசனம் ஒன்றை உருவாக்கி வழிபடுவதற்காக உருவாக்கப்பட்டது. தர்ம போதனைக்காகவும் இது பயன்படுத்தப்பட்டது.

  உ-ம் : மட்டக்களப்பு புளுக்குணாவ, அநுரதபுரம் கெப்பிட்டிக்கொலாவ, கலாகம்வெகர,

**பதானகர (தியான மனை)**

- துறவிகள் தியானம் செய்வதற்காக அமைக்கப்பட்டது. இரண்டு முற்றங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டது.

  உ-ம் : பசீமாராமய, - அனுராதபுரம், அரன்கல, ரிடிகல

Education கல்வி அதியாபன

**ஜந்தாகர**

- நோய்களிலிருந்து நிவாரணமளித்து பிக்குகளின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக அமைக்கப்பட்டது.
- பிக்குகள் நீராடும் இடமாகவும் காணப்பட்டது.
  உ-ம் : ராஜாங்கனை, அரன்கல, மகாதிவுள்வவை

**உபோசதகர (போதனாகர)**

- பிக்குகளின் சங்கக் கருமங்களை ஆற்றுவதற்காக அமைக்கப்பட்டது. விகாரை அமைந்துள்ள நிலத்தின் உயர்வான பகுதியில் இது அமைக்கப்படும்.
  உ-ம் : அநுராதபுரம் லோவா மகா பிரசாதய, ரத்தினப்பிரசாதய, பத்மசீம பிரசாதய

**பட்டிமாகர (சிலைமனை)**

- புத்தர்சிலைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டது. மண்டபம், அந்தராளம், கர்ப்பக்கிரகம் எனும் வாஸ்து விதிகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டது.
  உ-ம் : நாலந்தாகெடிகே, திவங்கசிலைமனை, இலங்காதிலக

**03) இந்தியக்கலையில் ஆணிவேராக் கருதப்படும் சிந்துவெளிக் கலைமரபு தனது வெளிப்பாட்டுப் பண்புகளில் வியத்தகு விடயங்களை உள்ளடக்கி உள்ளது.**

**1) சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற இலச்சினை ஒன்றையும், சிலை ஒன்றையும் குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

**முத்திரைகள்/ இலட்சினை**

பசுபதி (கொம்புக் கடவுள்), மரதேவதை தெய்வமும் பக்தனும், இரு புலிகளுடன் மல்லுக்கட்டும் மனித முத்திரை

**சிலைகள்**

பூசகர் வடிவம், செஞ்சுண்ணக் கல்லாலான முண்ட வடிவம்(கவந்த வடிவம்), சாம்பல்நிற கல்லாலான முண்ட வடிவம்(நடனப்பாங்கில் அமைந்த வடிவம்), நடனமாது

**2) ஹரப்பா மக்கள் உலோக வார்ப்பு நுட்ப முறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை ஆதாரத்துடன் சுருக்கமாக விளக்குக.** (05 புள்ளிகள்)

**நடனமாது**

- ஹரப்பாவில் கண்டெடுத்த வெண்கலத்தினால் செய்யப்பட்ட இச்சிலையானது சிந்துவெளிமக்களின் உலோகவார்ப்பு தொழில்நுட்ப ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றது.
- முழுப்புடைப்பு நுட்பமுடைய இச்சிலை 4.5 அங்குலம் உயரமானது.
- வெண்கல ஊடகத்தினால் உலோக வார்ப்பு முறையில் ஆக்கப்பட்டது.
- மோடிப்படுத்தப்பட்ட பண்புகளுடன் மெல்லிய உடலமைப்பு நளினம் என்பவற்றை புலப்படுத்துகின்றது.
- கை நிறைந்த வளையல்களும் கழுத்தில் ஆபரணங்களும் காணப்படுகிறது.
- வலது கையை இடுப்பில் வைத்து ரெளத்திரத் தோற்றத்தில் ஒரு காலை முன்னோக்கி வைத்தபடி காணப்படுகிறது.
- தலைமுடி கலைந்த தன்மையில் / சுருட்டையாக பின்னிய தன்மையில் குல்லி பண்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

**3) சிந்துவெளி மக்கள் நகர நிர்மாணிப்பில் மிகச்சிறந்த கட்டடக்கலை நுட்பங்களைப் பயன்படுத்தினர் ஆராய்க.** (08 புள்ளிகள்)

- மொஹன்ஜதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்கள் சிறந்த கட்டட நிர்மாணங்களை உடையனவாகக் காணப்பட்டன.
- ஒத்த பண்புகளையுடைய நகர அமைப்பு - உள்நகரம், வெளிநகரம் எனும் பிரிவுகள் உண்டு.
- வீடுகளின் அமைப்பு முறை, வீதியமைப்பு , வடிகாலமைப்பு, சுட்ட செங்கல்லைப் பயன்படுத்தியிருத்தல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படல்.
- பிரபுக்களின் இல்லங்கள் ஆடம்பரமாகக் காணப்படுகின்றன. அவர்களின் இல்லங்கள் பொதுமக்களின் வீடுகளை விடப் பெரியதாகவும், பொது மக்களின் வீடுகளுக்கு அப்பாலும் அமைந்திருந்தன.
- அவர்களின் வீடுகளினுள் குளியலறை, மலசலகூடம் போன்றவை இருந்துள்ளதோடு மாடிவீடுகளாக இருந்தமைக்கும் அத்தாட்சிகள் உள்ளன.
  பொது மக்களின் வீடுகள் ஒரே அமைப்பைக் கொண்ட கட்டடங்களாகும்.
- ஒரே வடிவத்திற்கமைய கட்டப்பட்ட வீட்டுத் தொடர்களாக இருந்துள்ளது.
- இவை வீதியின் இரு பக்கத்திலும் அமைந்திருந்தன.
- வீடுகளின் நுழைவாயில் பிரதான வீதியை நோக்கியிருக்கவில்லை.
- ஒரு வீட்டுத் தொடரில் 10 முதல் 12 வீடுகள் அமைந்திருந்தன.
- ஒவ்வொரு வீட்டிலும் விறாந்தை, ஓர் அறை மற்றும் சமையலறை ஆகியன இருந்துள்ளன.
- ஒரு வீட்டுத் தொடருக்குப் பொது மலசல கூடமும் பொதுக்கிணறும் இருந்துள்ளன.
- உள்ளகச் சுவர்கள் களிமண் கலவையினால் பூசப்பட்டிருப்பதோடு மிகவும் எளிமையாகவும் இருந்துள்ளன.
- கூரை பற்றிய ஆதாரங்கள் காணப்படவில்லை.
  வீதிகளில் நடைபாதையின் கீழ் நீர் வழிந்தோடும் வடிகால் கட்டமைப்பு ஒன்று இருந்துள்ளது.
- வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மண்குழாயினூடாக உப வீதிகளின் வடிகால்களுடனும், பிரதான வீதி வடிகாலுடனும் இணைக்கப்பட்டிருந்தன.
- உப வீதி வடிகால்கள் பிரதான வீதியுடன் இணைக்கப்பட்டிருந்தன.
- அத்தோடு உப வீதியின் வடிகால்கள் பிரதான வீதியுடன் இணையும் இடத்தில் வடிகட்டல் அமைப்பொன்று இருந்துள்ளதோடு, இந்த வடிகால் கட்டமைப்பு மிகவும் வினைத்திறன் மிக்கதாக இருந்துள்ளதாக கருதப்படுகின்றது.
- உட்புற நகர மத்தியிலுள்ள நீர்த்தடாகம் 39 அடி நீளமாகவும், 3 அடி அகலமாகவும், 8 அடி ஆழமாகவும் இருந்துள்ளது.
- இதைச் சுற்றி மூன்று பக்கத்திலும் அறைத்தொடர் இருந்துள்ளதோடு சமய அனுட்டானங்கள் நடத்தும்போது மதகுருமாரின் பாவனைக்காக இவை பாவிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.
- மேட்டு நிலமொன்றிலிருந்த செவ்வக வடிவமான கிணற்றிலிருந்து “அக்விடக்ட்” எனும் நீர்ப்பாசன முறையூடாகத் தடாகத்திற்கு நீர் பெறப்பட்டுள்ளது.
- சுரங்க வடிவிலான இந்த நீர்ப்பாசனக் கட்டமைப்பில் நீர் வெளியேறும் விசேட வில்வடிவிலான மதகு போன்ற கட்டடக்கலை அமைப்பொன்று காணப்படுகின்றது.
- தானியங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு பாரிய கட்டடமொன்று இருந்துள்ளதோடு, அது நீர்த்தடாகத்திற்கருகில் நில மட்டத்தை விட உயர்ந்த மேடையின் மேல் அமைக்கப்பட்டிருந்தது.

**04. அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சாஞ்சி தூபியும் அதற்கு பிற்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட தோரண வாயில்களும் மிகச் சிறந்த கலைப்படைப்புக்களாக விளங்குகின்றன.**

**1) சாஞ்சி தோரணங்களில் செதுக்கப்பட்ட ஜாதகக் கதைகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

ஜட்தந்த ஜாதகம், மகாகபி ஜாதகம், வெஸந்தர ஜாதகம், ஆலம்புஜா ஜாதகம், சாம ஜாதகம்

**2) சாஞ்சி தூபியின் கட்டடக்கலைப் பண்புகள் பற்றி சுருக்கமாக விளக்குக.**

(05 புள்ளிகள்)

- சாஞ்சித்தூபி பல விகாரைகளையும் உள்ளடக்கி அழகிய மலைக்குன்றின் மீது அமைந்துள்ளது. சாஞ்சித்தூபி அசோக மன்னனால் கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- இந்தியாவில் முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட தூபி சாஞ்சித் தூபியாகும். சாஞ்சியில் பெருந்தூபியாக காணப்படும் இது அசோக காலம் தொட்டு கி.பி. 11 ஆம் நூற்றாண்டுவரை பௌத்த மத்திய ஸ்தானமாக விளங்கியுள்ளது.
- கட்டடக்கலை சார்ந்த அமைப்புக்களாக பெரும் தாதுகோபமும் அதனைச்சுற்றியுள்ள இரு சிறிய தாதுகோபங்களும், நான்கு தோரணங்களும் இதன் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிறது.
- சாஞ்சித் தாதுகோப அங்கங்களான கல்வேலி, மேதிய(சுற்றுப்பிரகாரவீதி), கர்பய, ஹர்மிகா, யூபய/யஷ்திய, குடைகள்(சத்திரய), தோரணங்கள் காணப்படுகின்றன.
- சுங்க அரசபரம்பரையினர் பௌத்த மதத்திற்கு அனுசரணை வழங்கியதன் விளைவாக சாஞ்சித்தூபி பெருப்பிக்கப்பட்டு, அசோகனின் காலத்தில் 70 அடி விட்டமும் 75 அடி உயரமும் கொண்டதாக செங்கட்டிகளால் அமைக்கப்பட்ட சாஞ்சித்தூபி சுங்கர்களின் காலத்தில் புனர்நிர்மாணத்தின் பின் 120 அடி விட்டமும் 56 அடி உயரமும் உடையதாக மாற்றமடைந்தது.
- அசோகனின் மரவேலிகளும் 2 பக்கங்களிலுமுள்ள மரப்படிகட்டுகளுக்கும் பதிலாக சுங்கர்களால் கல்வேலியும் கற்படிக்கட்டுக்களும் அமைக்கப்பட்டன.
- கல்வேலிகளுக்கான கற்கம்பங்கள் 11 அடி உயரமானவை. தரையின் கீழ் 2 அடியில் நாட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கம்பத்திற்கும் இடையில் 2 அடி இடைவெளிகள் விடப்பட்டுள்ளன.
- அசோகன் காலத்தில் மரத்தால் தோரணங்கள் நிர்மாணிக்கப்பட்டதாகவும் பின்பு சாதவாகனர் காலத்தில் கற்களால் தோரணங்கள் அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.
- நீள்சதுர வடிவமான அடித்தளத்தின் மீது மேதிய எனப்படும் அடித்தள சுற்றுப்பிரகார வீதி அமைந்துள்ளது.
- அடித்தளத்தின் மீது செங்கல்லால் ஆன அரைக்கோளவடிவில் நிர்மாணிக்கப்பட்ட கர்பய எனப்படும் அண்டம் அமைந்துள்ளது. இங்கும் சாஞ்சித்தூபியின் அடிப்படை அங்கமான மேதிய காணப்படுகின்றது.
- இது அடித்தளத்தின் 16 அடிக்குமேல் இருந்து இன்னொரு வலம்வரும் வீதியாகக் காணப்படுகின்றது.
- இவ் அண்டம் நீர்க்குமிழ் வடிவமுடையது.
- அண்டத்தின் மீது சதுர கல்வேலியால் அமைக்கப்பட்ட ஹர்மிகா அமைந்துள்ளது.

**3) அசோகத் தூண்களின் அமைப்பு முறையில் உள்ள கலைப்பண்புகளை விபரிக்குக.**
(08 புள்ளிகள்)

- அசோகத் தூண்கள் இந்திய துணைக்கண்டத்தின் பல்வேறு இடங்களில் மௌரிய அரசரான அசோகரால் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட தூண்களைக் குறிக்கும்.

- அசோக மன்னன் தனது கட்டளைகளையும், போதனைகளையும் எழுதிய இடங்களில் அமைக்கப்பட்ட தூண்கள் அசோகத் தூண்களெனப் பெயர் பெற்றன.

- 30 தூண்களுக்கு அதிகமான தூண்கள் இந்தியாவில் அமைக்கப்பட்டதென அறியப்படுகிறது. ஆனால் தற்போது 19 தூண்கள் மட்டுமே உள்ளன.

- இப்போது கண்டுபிடிக்கப்பட்டவற்றில் ராம்பூர்வா, லௌரிய நந்தன்கார், சாரநாத், சாஞ்சி, திபிலி போன்ற இடங்களில் உள்ளவை மிகச்சிறந்த கலைப் படைப்புகளோடு காணப்படுகின்றன.

- இவை அமைக்கப்பட்டதன் நோக்கம் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கான செய்திகளை அனுப்புதல், புத்தபெருமானின் பிறப்பு முதல் பரிநிர்வாணம் அடைந்த இடங்களை நினைவு கூரல், துறவிகளின் கட்டுப்பாட்டு ஒழுக்கக் கட்டளைகளைப் பிறப்பித்தல் போன்றன.

- தூண்கள் 30-45 அடி வரை உயரமுடையன. சூனார் எனும் கல்லினாலாக்கப்பட்டுள்ளன.

- தண்டுப்பகுதி, போதிகை என்பன வேறு வேறாக செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.

**தூண்கள்**

1. தலை (உச்சிப்பகுதி)
2. தண்டு என இரு பகுதிகளைக் கொண்டவை.

- இத் தூண்தனிக் கல்லினாலே அமைக்கப்பட்டுள்ளன.
- அசோகத் தூண்களில் தூணின் உச்சிப்பகுதியே மிகவும் முக்கிய உறுப்பாகும். இத்தூண் தலைப்பகுதி முக்கிய 3 பிரிவுகளைக் கொண்டது.

1. மணிப்போதிகை
2. பீடம் (உச்சிப் பரப்பு)
3. விலங்குருவங்கள்

- தூண்களின் உச்சியில் மணிப்போதிகையும் அதன் மேல் ஒருபீடமும் பீடத்தின் மீது விலங்குருவமும் காணப்படும்.

- மணிப் போதிகை விரிந்த தாமரைமலர் ஒன்றை கவிழ்த்து வைத்தது போன்று காணப்படுகின்றது என வின்ச்சிமித் கூறுகின்றார்.

- மணிப்போதிகையின் மேல் பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பீடம் வட்டமாகவும், சதுரமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

- இப்பீடத்தில் வெளிப்புறச் சுவரில் தர்மசக்கரம் அவற்றுக்கிடையிடையே எருது, குதிரை, யானை, சிங்கம் ஆகிய மிருகங்களின் புடைப்புச் சிற்பங்களும் மலர்க் கொடி அலங்காரங்களும், அன்னவரிசைகளும் செதுக்கப்பட்டுள்ளன.

- தூண்களின் உச்சிப் பரப்பை அலங்கரிக்கும் விலங்குருவங்கள் அமைக்கப்பட்டதற்கு பலகாரணங்கள் உண்டு என தொல்பொருள் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

Education கல்வி

• விலங்குருவங்கள் 4 திசைகளையும் சுட்டிக் காட்டுகின்றன என வின்சன் சிமித் கூறுகின்றார். அவை:- கிழக்கு – யானை, மேற்கு – எருது, வடக்கு – சிங்கம், தெற்கு – குதிரை என அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

• 30 தூண்களுள் 10 தூண்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. 20 தூண்கள் கல்வெட்டுக்கள் இன்றிக் காணப்படுகின்றன.

• இத்தூண்கள் பல புத்தபெருமானின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய முக்கிய நகரங்கள் சார்ந்ததாக அமைந்திருப்பதும் சிறப்பான விடயமாகிறது.

• மௌரியகாலத்தில் அசோகத் தூண்களில் கட்டடக் கலையம்சங்களை விட சிற்பக்கலை அம்சங்கள் கூடுதலான செல்வாக்குப் பெற்றிருக்கின்றதென்பது அறிஞர்களின் கருத்தாகும்.

• மௌரியகாலத்து கற்சிற்பிகள் கற்பணிகளிலேயே நன்கு தேர்ச்சிபெற்றிருந்தனர் என்பதற்கு அக்காலத்தில் ஒரேகல்லில் செதுக்கப்பட்டுள்ள அசோகத்தூண்கள் சான்று பகர்கின்றன.

**05. நைல் நதியின் கொடையான எகிப்திய நாகரிகம் ஏனைய ஐரோப்பிய நாகரிகங்களுக்கு வழிகாட்டியாக விளங்கியது எனலாம்.**

**1) பிரமிட் கட்டடக் கலையின் ஆரம்பகால வளர்ச்சிப் படிமுறையில் இரண்டைக் குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

மண்குவியல்கள், மஸ்டபா, படிமுறை பிரமிட், பெரும் பிரமிட்

**2) பிரமிட்டுக்களின் திட்டமைப்பு, உபயோகித்த மூலப்பொருட்கள், தொழிநுட்பம் என்பவற்றை குபு, காப்ரே பிரமிட்டுக்களின் அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

(05 புள்ளிகள்)

**கு.ஃ.பு பிரமிட்**

- மிகப் பெரிய பிரமிட்டான 'கு.ஃ.பு' பிரமிட் கி.மு. 2580 – 2560 எனும் காலப்பகுதியில் கட்டப்பட்டதாக நம்பப்படுகின்றது. இதன் ஆரம்ப கால உயரம் 481 அடி ஆனதுடன் தற்போது இது 455 அடி உயரமுடையது.
- இப் பிரமிட்டு 'கு.ஃ.பு'' எனப்படும் பாராவோவினால் கட்டப்பட்டது.
- ஆதி காலத்தில் பிரமிட்டின் முகங்களுக்கு மென்மையான பரப்புடைய கற்றகடுகள் பதித்திருந்த போதிலும் தற்போது அவற்றைக் காண முடியாதுள்ளது.
- பிரமிட் பாரிய அளவைக் கொண்ட போதிலும் உட் பகுதியில் மிகக் குறுகிய பரப்பளவே உபயோகப்படுத்தப்பட்டது. குபு பிரமிட்டுகளின் உட்பகுதி 3 பிரதான பிரிவுகளைக் கொண்டது.

**கப்றே பிரமிட்**

- ஏறக்குறைய கி.மு. 2570 இல் கட்டப்பட்டது. இது எகிப்திலுள்ள இரண்டாவது பாரிய அளவுடைய பிரமிட் ஆகும்.
- 448 அடி உயரமுடையது. ஆரம்பத்தல் இது 471 அடி உயரமாக இருந்தது என கருதப்படுகிறது.
- இது அரச பரம்பரையின் நான்காம் தலைமுறையில் இருந்த 'காப்றே' மன்னனால் கட்டுவிக்கப்பட்டது.

• இப்பிரமிட்டுகளும் பராவோ மக்களின் மரணத்துக்குப் பின்வரும் ஆன்மாக்களுக்காகக் கட்டப்பட்டதுடன் அவர்களது பூதவுடல்கள் 'மமி' களாக இங்கே அடக்கம் செய்யப்பட்டன.

3) எகிப்திய ஆலயங்களின் கலைப்பண்புகளை அபுசிம்பல், லக்சோர் ஆகிய ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

மத்திய இராசதானிக் காலத்தில் இருந்து ஆலயங்கள் அமைத்தல் பிரபல்யமடைந்தது.

**அபுசிம்பல் தேவாலயம்**

- ராம்சேஸ் மன்னனால் கட்டப்பட்டது.
- அமூன், ஹொரக்தி, பதத் ஆகிய தெய்வங்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது.
- புதிய ராசதானிக் காலத்துக்குரிய 19ம் அரச பரம்பரைக்குரியது. நைல் நதியின் மேற்குக் கரையோரமாக குஷ்னம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டது.
- இயற்கையான கற்குன்றினை குடைந்து அமைக்கப்பட்டது.
- துவார மண்டபத்துக்கு முன்னே ராம்சேஸ் மன்னனின் 70 அடி உயர பாரிய சிற்பங்களும மேற்புறம் சூரியக் குறியீட்டுடன் அமூன் தெயவத்தின் சிற்பமும், ஆலயத்தினுள் 32 அடி உயரமான ஒசைரிஸ் தெய்வத்தினைக் குறிக்கும் பல சிற்பங்களும் செதுக்கல்களும் உள்ளன.

**லக்சோர் தேவாலயம்**

- 18ம் அரச பரம்பரையை சேர்ந்த அமென் ஹெட்டொப் மன்னால் தொடக்கப்பட்ட இவ்வாலயம் 19ம் பரம்பரையை சேர்ந்த 2ம் ராம்சேஸ் மன்னனால் பூர்த்திசெய்யப்பட்டது.
- ஒட்டுமொத்த கட்டிட தொகுதியும் மதிலால் சூழப்பட்டுள்ளது.
- துவார மண்டபத்தின் இருபுறமும் சாய்வான சுவர்கள்.
- உள்ளே உயரமான தூண்களையுடைய திறந்த செவ்வக வடிவ மண்டபம், அதனை அடுத்த மண்டபமும் செவ்வக வடிவிலான திறந்த மண்டபமாகும்.
- இதற்கு அடுத்ததாக கர்ப்பக்கிரகமாகும். இம்மண்டபத்தின் 52 அடி உயரமும் 12 அடி சுற்றளவுமுள்ள தூண்கள் சிறப்பானவை.
- தூணின் தண்டுப் பகுதியில் செதுக்கல்கள் காணப்படுகின்றன.
- மண்டபத்தின் வடக்குப்புற சுவரில் வேட்டையாடல் காட்சி காட்டப்பட்டுள்ளது.

**06. ஆதி மனிதனால் வரையப்பட்ட குகை ஓவியங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனது வாழ்வியலை பிரதி பலிக்கின்றன.**

**1) ஐரோப்பாவில் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் வரையப்பட்ட இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

லஸ்கா, அல்ராமீரா, பொண்டிகோமெ, ஷுவேட்

**2) வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களின் வரை நுட்பமுறை, வர்ணங்கள், கருத்துவெளிப்பாடு, கருப்பொருள் என்பன தொடர்பில் சுருக்கமாக விளக்குக.**

(05 புள்ளிகள்)

- பிரதான கருப்பொருளாக மிருக உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- அன்றாட வாழ்க்கை அனுபவங்களைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன.
- வேட்டையாடல் அனுபவங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும் வரையப்பட்டன.
- தாம் வாழ்ந்த குகைகளின் உட்சுவர் மேற்கூரை என்பவற்றில் வரைந்தனர்.
- கோட்டு வரைதல்கள், வர்ண ஓவியங்கள், கற்சுவரைக் கூரிய ஆயுதத்தினால் கீறி ஆக்குதல் ஆகிய நுட்ப முறைகள்.
- அத்துடன் கை அடையாளங்களால் அச்சுப்பதித்தும் ஆக்கப்பட்டுள்ளன.
- வர்ணத்தயாரிப்பு, வர்ணக் கையாள்கை, கோடு வரைதல், அளவுப் பிரமாணம், பிராணிகளின் உடல் நிலைகளைக் காட்டல் என்பவற்றில் அல்ராமீராக்குகை ஓவியங்கள் மேம்பட்ட தன்மையுடையன.
- முப்பரிமாணத் தன்மை வெளிப்படும் வகையிலும் வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.
- தெளிவான கருத்துவெளிப்பாடு காணப்படவில்லை.

**3) வரலாற்றுக்கு முற்பட்ட கால குகை ஓவியங்களுக்கும், எகிப்திய கல்லறை ஓவியங்களுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைப் பண்புகள் தொடர்பில் விளக்குக.**

(08 புள்ளிகள்)

**ஒற்றுமை பண்புகள்**

- உருவங்கள் பெரும்பாலும் பக்கப் பார்வையுடன் காட்டப்பட்டிருத்தல்.
- இயற்கையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வர்ணங்களை பயன்படுத்தியிருத்தல்.
- சுவர்ப் பரப்பினைச் சுரண்டி வரையும் காட்சிகள் காணப்படல்.
- பிரதான பாத்திரம் (பைசன் எருது, மன்னரது உருவம்) அதன் முக்கியத்துவம் கருதி மிகப் பெரிதாக வரையப்பட்டுள்ளது.
- இரண்டிலும் உலர்சுதை நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வேற்றுமை பண்புகள்**

| வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள் | எகிப்திய ஓவியங்கள் |
|---|---|
| மிருக வடிவங்கள் பிரதான கருப்பொருள் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | பாரோ மன்னருடன் தொடர்புடைய /அரண்மனையுடன் தொடர்புடைய கருப்பொருள் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| மனித வடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் கோட்டுருவங்களாக காட்டப்பட்டுள்ளன. | கமச்செய்கை, கால்நடை வளர்ப்பு, வேட்டைக் காட்சிகள் போன்ற கருப்பொருளிற்கு அதிகமாக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. |
| ஆதிமனிதனின அன்றாட வாழ்கையில் காணப்பட்ட நம்பிக்கை, அனுபவங்கள் பல்வேறுபட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டதாக வரையப்பட்டுள்ளது. | பாரோக்களின் மம்மிகளிலும், பிரதியுருக்களையும், வைப்பதற்காக அமைக்கப்பட்ட கல்லறைகளிலும் நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்ட ஓவிய மரபுடன் வரையப்பட்டுள்ளது. |
| மிருக வடிவங்கள் உயிர்ப்பான இயற்கைத் தன்மையுடன் வரையப்பட்டுள்ளன. | மனித, மிருக, பறவை வடிவங்கள் யாவும் உயிர்ப்பான தன்மையுடன் வரையப்பட்டுள்ளன. |
| வர்ணப் பயன்பாட்டில் முப்பரிமாணத் தன்மை காட்டப்பட்டுள்ளது. | வர்ணப் பயன்பாட்டில் இருபரிமாணத் தன்மை காட்டப்பட்டுள்ளது. |
| பின்னணிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. | பின்னணியில் கைரோக்கிளிப்ஸ் அட்சரங்கள் வரையப்பட்டுள்ளன. |
| தெளிவான கருத்துவெளிப்பாடு காணப்படவில்லை | தெளிவான கருத்துவெளிப்பாடு காணப்படுகிறது. |
| கற்குகைகளில் காணப்படுகின்றது. | பெரும்பாலான ஓவியங்கள் பிரமிட்டுக்களிலேயே காணப்படுகின்றன. |

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page